பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டால் தூக்கு தண்டனை

தே.மு.தி.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் ஆவேசம்

சென்னை, பிப்.8

தமிழகத்தில் பாலியல் வன்கொடுமை குற்றவாளிகளுக்கு தூக்கு தண்டனை வழங்க வேண்டும் என்று பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

தே.மு.தி.க. மாவட்ட செயலாளர்கள் ஆலோசனை கூட்டம், சென்னை கோயம்பேட்டில் உள்ள அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில், நேற்று நடைபெற்றது. கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தலைமையில் நடந்த இந்த கூட்டத்தில், துணை பொதுச்செயலாளர்கள் எல்.கே.சுதீஷ், பார்த்தசாரதி, அவைத் தலைவர் இளங்கோவன் உட்பட மற்றும் 83 மாவட்ட செயலாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில், பிரேமலதா விஜயகாந்த் பேசியதாவது:– 12ந்தேதி தமிழகம் முழுவதும் வருகிற கொடிநாள், பொன் விழாவை மிகச் சிறப்பாக கொண்டாட வேண்டும். வருகிற 2026 சட்டசபை தேர்தலில், நாம் இருக்கும் கூட்டணி மிகப்பெரிய கூட்டணியாக மாறும். மகத்தான வெற்றி பெறும். அந்த கூட்டணியில் இன்னும் பலர் வந்து இணைய உள்ளார்கள். 234 சட்டசபை தொகுதிகளிலும், தேர்தல் வெற்றிக்கான வியூகங்களை அமைக்கும் பணிகள் தொடங்க உள்ளோம்.

வருகிற ஏப்ரல் மாதம், தே.மு.தி.க பொதுக்குழு மற்றும் செயற்குழு

கூட்டம் தர்மபுரி மாவட்டத்தில் நடைபெற உள்ளது. அந்த கூட்டத்தில், புதிய பதவிகள் அறிவிக்கப்பட உள்ளன. இவ்வாறு அவர் பேசினார்.

10 தீர்மானங்கள்

இந்த கூட்டத்தில், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், சமூக ஆர்வலர் ஜகபர் அலி மற்றும் கட்சி நிர்வாகிகள் மரணத்திற்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதேபோல, 'அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் ஞானசேகரனுக்கு உதவிய சார் யார்? என்பதை கண்டுபிடித்து கைது செய்யவேண்டும், வேங்கை வயல் விவகாரத்தில் சி.பி.ஐ. விசாரணை வேண்டும், புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மத்திய, மாநில அரசுகள் நிவாரணத் தொகை வழங்க வேண்டும்' என்பது உள்பட 10 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தொடர்ந்து, பிரேமலதா விஜயகாந்த் நிருபர்களிடம் கூறியதாவது:–

தமிழகத்தில் சிறுமிகள் முதல் யாருக்கும் பாதுகாப்பு இல்லாத சூழல் உள்ளது. பாலியல் வன்கொடுமையில் ஈடுபடுபவர்களுக்கு தூக்கு தண்டனை வழங்க வேண்டும். மேலும் கஞ்சா, மது உட்பட போதைப்பொருட்கள்தான் இதற்கெல்லாம் காரணமாக உள்ளன.

திருப்பரங்குன்றம் மலை குறித்து இத்தனை ஆண்டுகள் இல்லாத பிரச்சினை இப்போது ஏன் வருகிறது. திமுக ஆட்சிக்கு வரும்போதெல்லாம் மதத்தை, சாதியை தூண்டி அரசியல் செய்வதாக மக்கள் கருதுகின்றனர்.

வாழ்ந்து மறைந்த எந்த தலைவர்கள் குறித்தும் அவதூறாக பேசுவதற்கு யாருக்கும் உரிமை இல்லை. கட்சியின் பொதுக்குழுக் கூட்டம் ஏப்ரல் மாதம் தருமபுரியில் நடைபெறுகிறது. அப்போது விஜயபிரபாகரன் உள்ளிட்டோருக்கு புதிய பதவிகள் வழங்கப்படும். 2026ல் எங்கள் கூட்டணி நிச்சயம் ஆட்சி அமைக்கும்.

தமிழக அரசும், கவர்னரும் கணவன், மனைவி போல் இருக்க வேண்டும். இணக்கமான சூழலுடன் பயணிக்க வேண்டும். இதனால் தமிழகத்திற்கு, பொதுமக்களுக்கும் நல்லது.

அண்ணா பல்கலைக்கழக விவகாரத்தில் யார் அந்த சார் என்பது மக்களுக்கு தெரிய வேண்டும். மறைந்த தேமுதிக தலைவர் விஜயகாந்த்க்கு பாரத ரத்னா விருதும் பொது இடத்தில் மணிமண்டபமும் அமைக்க வேண்டும். கோயம்பேடு பாலத்துக்கு அவரது பெயரை சூட்ட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

பாலியல் தொல்லை வழக்கு நிரூபிக்கப்பட்டால் ஆசிரியர்களின் கல்வித்தகுதி முழுமையாக ரத்து செய்யப்படும்: அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி எச்சரிக்கை

சென்னை, பிப்.8

பாலியல் தொல்லை வழக்கு நிரூபிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட ஆசிரியரின் கல்வித் தகுதி முழுமையாக ரத்து செய்யப்படும் என அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி எச்சரிக்கை விடுத்தார்.

பள்ளி மாணவிகளுக்கு, கல்வியை கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களே பாலியல் தொந்தரவு கொடுக்கும் சம்பவங்கள் சமீப காலங்களாக அதிகரித்து கொண்டே வருவதை பார்க்க முடிகிறது.

அதிலும் சமீபத்தில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அரசு பள்ளி ஆசிரியர்கள் 3 பேர், 8ம் வகுப்பு மாணவியை பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. இதனை கண்டித்து தொடர்ந்து போராட்டங்கள் நடந்து வருகிறது.

சரியான நடவடிக்கை எடுத்து இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பது பெற்றோர், கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்களின் வலியுறுத்தலாக இருந்து வருகிறது.

இந்த நிலையில் இதுகுறித்து சென்னையில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியிடம் நிருபர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் கூறியதாவது:

பாலியல் தொல்லை சம்பவம் தொடர்பான வழக்கில் உண்மைத் தன்மை நிரூபிக்கப்பட்டால், அது யாராக இருந்தாலும் தண்டனையோடு நிறுத்திவிடாமல், அவர்களுடைய (ஆசிரியர்களின்) கல்வித் தகுதியை முழுமையாக ரத்து செய்ய அனைத்து விதமான பணிகளையும் நாங்கள் செய்வோம்.

தலைமை ஆசிரியர்களுக்கு தலைமைப் பண்பு சார்ந்த பயிற்சிகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. 6 ஆயிரம் பேர் இதில் பங்கேற்கிறார்கள். அந்த தலைமை ஆசிரியர்கள் ஆசிரியர்களை அழைத்து அவர்களை பக்குவப்படுத்தும் வகையில் ஆலோசனைகளை வழங்க வேண்டும். இனிவரும் காலங்களில் காவல்துறையுடன் இணைந்து இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் இருக்க முழுமையாக நடவடிக்கை பணிகளில் நாங்கள் ஈடுபடுவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் நிலம் தொடர்பான சிறப்பு குறைகேட்பு கூட்டம்

விழுப்புரம், பிப்.8–

விழுப்புரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று, நிலம் தொடர்பான சிறப்பு குறைகேட்பு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமை தாங்கி பொதுமக்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்து மனுக்களை பெற்றார். இக்கூட்டத்தில் பட்டா மாற்றம், நில ஒப்படை, இலவச வீட்டுமனைப்பட்டா, ஆக்கிரமிப்பு, நில அபகரிப்பு, நிலக்கையகம் தொடர்பாக 293 மனுக்கள் பெறப்பட்டன. இம்மனுக்களை பெற்ற கலெக்டர் ஷேக் அப்துல் ரஹ்மான், இம்மனுக்களை உடனடியாக பரிசீலனை செய்து தீர்வு காணும்படி சம்பந்தப்பட்ட துறை அலுவலர் களுக்கு அறிவுறுத்தினார். கூட்டத்தில் வருவாய் அலுவலர் அரிதாஸ், திண்டிவனம் சப் கலெக்டர் திவ்யான்ஷு நிகம், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர்கள் யோக ஜோதி, சிவக்கொழுந்து, சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் முகுந்தன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் தமிழரசன், தனித்துணை ஆட்சியர் முத்துகிருஷ்ணன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

MANAPPURAM HOME FINANCE LTD.

மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

முன்பு மணப்புரம் ஹோம் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

CIN: U65923K12010PIC039179,

பதிவு அலுவலகம்: IV/470A, (பழையது) W/638A (புதியது) மணப்புரம் ஹுவுஸ், வளபாடு திருச்சூர், கேரளா – 680 567

கார்ப்பரேட் அலுவலகம்: மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட், 3வது தளம், யூனிட் எண்.301–315, ஏ விங், "கனக்கியா வால் தெரு", அந்தேரி குர்லா சாலை, அந்தேரி கிழக்கு, மும்பை – 400 093, மகாராஷ்டிரா.

போன்: 022–66211000, இணையதளம் : www.manappuramhomefin.com

டிமாண்ட் நோட்டீஸ்

நிறுவனங்கள் சட்டம், 1956ன் கீழ் பதிவு செய்யப்பட்ட மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட் பதிவு அலுவலகம் : IV/470A (பழையது) w/638A (புதியது), மணப்புரம் ஹவுஸ், வளபாடு, திருச்சூர், கேரளா 680567 மற்றும் இந்தியாவில் பல்வேறு இடங்களில் கிளைகளுடன் (இனி "MAHOFIN" என குறிப்பிடப்படுகிறது) செயல்படும் இந்நிறுவனம் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு நலச் சட்டம் 2002ன் (இனிமேல் சட்டம் எனக் குறிப்பிடப்படும்) பிரிவு 2ன் உட்பிரிவு (1)ன் உட்பிரிவு (m)ன் உட்பிரிவு (iv)ன் பொருளில் உள்ள நிதி நிறுவனம் மற்றும் இந்திய அரசின், நிதிச் சேவைகள் துறையின், நிதி அமைச்சகம், புதுடெல்லி வெளியிட்ட டிசம்பர் 18, 2015 தேதியிட்ட அறிவிப்பு எண். எஸ்.ஓ. 3466 (இ) ஆகியவற்றின் கீழ் கட்டுமானம் மற்றும் / அல்லது குடியிருப்பு வீடுகளை வாங்குவதற்கான கடன் வழங்கும் வணிகத்துடன் மற்ற வணிகத்தை மேற்கொண்டு வருகிறது. அதேசமயம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை வரிசை எண். 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி கடன்தாரர் / உடன் கடன்தாரர்கள் MAHOFINலிருந்து கடன் பெற்றனர் மற்றும் அதேசமயம் SARFAESI சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குனராக MAHOFIN உள்ளது மற்றும் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ஒரக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(2) மற்றும் விதி 2ன் கீழ் அதன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி கடன்தாரர்கள் / உடன் கடன்தாரர்கள், நோட்டீஸ்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, அறிவிப்புத் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் கூடுதல் வட்டியுடன் திருப்பிச் செலுத்துமாறு கோரிக்கை அறிவிப்பை வழங்கியிருந்தார். ஆனால் பல்வேறு காரணங்களுக்காக அவர்களில் சிலருக்கு நோட்டீஸ் வழங்கப்படவில்லை. அதுமட்டுமல்லாமல் கீழே பட்டியலிடப்பட்டுள்ள கடன்தாரர்களின் தகவல்களின் நோக்கங்களுக்காக, இந்த பொது அறிவிப்பின் மூலம் கடன் பெற்றவர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

வ. எண்.	கடன்தாரர்/ உடன்கடன்தாரர் பெயர்/ LAN/கிளை	ஈடுபெற்ற சொத்துக்களின் விவரம் இது தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பாத்தியதை	என்பிஏ தேதி	அறிவிப்பு அனுப்பப்பட்ட தேதி மற்றும் செலுத்த வேண்டிய தொகை
1	சங்கரி பி பூவணன் எஸ் /MHL00410017831/ காஞ்சிபுரம்	ஆர்.எஸ். எண் (பழையது) 82/1, ஆர்.எஸ். எண். (புதியது) 82/97, கழனிப்பாக்கம் கிராமம், செய்யார் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம், தமிழ்நாடு, பின்கோடு: 604409. எல்லைகள் : கிழக்கு - பி மணி நிலம், மேற்கு - தெரு, தெற்கு - பி மணி நிலம், வடக்கு - ஏரிக்கரை	11-01-2025	15-01-2025 & ரூ.299610/-

எனவே, மேலே குறிப்பிட்டுள்ளபடி, இந்த அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள், அந்தந்த கடன்தாரர் / உடன் கடன்தாரர்களுக்கு எதிராக, மேலே காட்டப்பட்டுள்ள மொத்த நிலுவைத் தொகையை செலுத்துமாறு கடன்தாரர்கள் / உடன் கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மொத்த நிலுவைத் தொகையை அந்தந்த கடன்தாரர்/ உடன் கடன்தாரர்கள் கூடுதல் வட்டியுடன் சேர்த்து செலுத்தத் தவறினால், MAHOFIN மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மீது உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(4)ன் கீழ் நடவடிக்கையை மேற்கொள்ளும். சட்டம் மற்றும் இங்கு உருவாக்கப்பட்ட விதிகளின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட பிற முறைகளில் அறிவிப்பு சேவைக்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன. SARFAESI சட்டத்தின் பிரிவு 13(8)ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, பொது ஏலம் அல்லது தனியார் ஒப்பந்த விற்பனை மூலம் மாற்றுவதற்கான அறிவிப்பு வெளியிடப்படும் தேதிக்கு முன்பு எந்த நேரத்திலும் MAHOFINக்கு ஏற்படும் செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவுகள் ஆகியவற்றுடன் செலுத்த வேண்டிய முழுத் தொகையையும் செலுத்துவதன் மூலம், கூறப்பட்ட அடமானத்தை மீட்டெடுக்க முடியும் என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

SARFAESI சட்டத்தின் எஸ் 13 (13)ன் கீழ், விற்பனை, குத்தகை அல்லது வேறு எந்த வகையிலும் பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மாற்றுவது மற்றும்/அல்லது கையாள்வதில் இருந்து நீங்கள் தடை செய்யப்படுகிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளவும்.

ஒப்பம்/–

தேதி: பிப்ரவரி 08, 2025

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,

இடம்: தமிழ்நாடு

மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

மே 4ந்தேதி மருத்துவ 'நீட்' நுழைவு தேர்வு: அடுத்த மாதம் 7ந் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்

சென்னை, பிப்.8–

நாடு முழுவதும் உள்ள மருத்துவக்கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையும், மற்றும் இயற்கை மருத்துவப்படிப்புகளான சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஹோமியோபதி ஆகியவற்றுக்கான மாணவர் சேர்க்கையும் 'நீட்' நுழைவுத் தேர்வுகள் அடிப்படையில் நடத்தப்பட்டு வருகிறது. அதேபோல, கால்நடை மருத்துவப்படிப்புகளான பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச் படிப்புக்கான அகில இந்திய ஒதுக்கீடு சேர்க்கை நீட் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் நடத்தப்படுகிறது. இந்த தேர்வை, தேசிய தேர்வுகள் முகமை நடத்துகிறது. இந்த நிலையில், 2025–26ம் கல்வியாண்டுக்கான மருத்துவப்படிப்பு மாணவர் சேர்க்கை நீட் நுழைவுத் தேர்வு வருகிற மே மாதம் 4ந்தேதி நடைபெற உள்ளது. இதற்கான ஆன்லைன் விண்ணப்ப பதிவு தொடங்கி உள்ளது. https://neet.nta.nic.in, https://www.nta.ac.in/ ஆகிய இணையதளம் வழியே விண்ணப்பிக்கலாம். நீட் தேர்வுக்கு விண்ணப்பிக்க அடுத்த மாதம் (மார்ச்) 7ந்தேதி நள்ளிரவு 11.59 மணி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களில் திருத்தங்கள் மேற்கொள்ள மார்ச் 9ந்தேதி முதல் 11ந்தேதி வரை அவகாசம் வழங்கப்படுகிறது. தேர்வுக்கான கட்டணமாக பொதுப்பிரிவுக்கு ரூ.1700ம், பிற்படுத்தப்பட்டோருக்கு ரூ.1,600ம், எஸ்சி/எஸ்டி பிரிவுக்கு ரூ.1,000ம் என்றளவில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஜிஎஸ்டி மற்றும் சேவைக் கட்டணம் கூடுதலாக வசூலிக்கப்படும். நீட் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கான தேர்வு மையங்கள் குறித்த விவரங்கள் ஏப்ரல் மாதம் 26ந்தேதி வெளியிடப்படும். 2025ம் ஆண்டுக்கான நீட் தேர்வு முடிவுகள் வருகிற ஜூன் மாதம் 14ந்தேதி வெளியிடப்படும் என தேசிய தேர்வுகள் முகமை அறிவித்துள்ளது.

Notice for Loss of Share Certificate of TVS MOTOR COMPANY LIMITED

(FOR CLAIM FROM IEPF AUTHORITY)

NOTICE is hereby given that the following Share Certificate(s) of **TVS Motor Company Limited** has / have been lost or misplaced or stolen and registered holder(s) / legal heir(s) is / are in the process of applying to Investor Education and Protection Fund (IEPF) Authority for refund of the shares and dividends transferred to IEPF

Folio No.	Name of Shareholder(s)	No. of Shares	Share Certificate No(s).	Distinctive Nos.
R1189	RAJENDRA MAGAN PATEL PANKAJ VANMALI PATEL	500	1704	1517681 to 1518180

This notice is being issued as per Schedule III of the Investor Education and Protection Fund Authority (Accounting, Audit, Transfer and Refund) Rules, 2017, as amended from time to time.

The public are hereby warned against purchasing or dealing in any way, with the above Share Certificates. Any person(s) who has / have any claim in respect of the said Share Certificate(s) should lodge such claim with evidence to the Company, at its Registered Office, **M/s. TVS Motor Company Limited,** "Chaitanya", No. 12, Khader Nawaz Khan Road, Nungambakkam, Chennai-600 006 (email id : contactus@tvsmotor.com) or to its Share Transfer Agents, **Integrated Registry Management Services Private Limited,** "Kences Towers", 2nd Floor, No. 1 Ramakrishna Street, North Usman Road, T Nagar, Chennai-600 017, (**e-maild id :** srirams@integratedindia.in) **within 15 days** of publication of this notice, after which no claim will be entertained and the legal heir(s) of the registered holder will apply to IEPF for refund of shares and dividends. Any person dealing with the above said shares will be doing so at their own risk.

sd/-

PANKAJ VANMALI PATEL

2080, Digi Mohollo, Nr. Library Sayaji Road,

Navsari-396 445

Date : 08.02.2025

Place : Chennai

(Name and Address of Shareholder)

தமிழக மீனவர்கள் கைது விவகாரத்தில் மத்திய அரசு பாராமுகம் ஏன்?: ஸ்டாலின்

சென்னை, பிப்.8–

'தமிழக மீனவர்கள் கைது விவகாரத்தில் மத்திய அரசு பாராமுகமாகவே இருக்கிறது' என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் சமூகவலைதள பதிவில் கூறியிருப்பதாவது:–

இலங்கை கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதையும், கைது செய்யப்படுவதையும் தடுக்க ஒன்றிய அரசு தலையிட்டு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் பல கடிதங்கள் எழுதியும் ஒன்றிய அரசு பாராமுகமாகவே உள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 97 பேரையும், கைப்பற்றிய 216 படகுகளையும் விடுவிக்கக்கோரி, தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி எம்.பி.க்கள் நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டம் நடத்தி உள்ளனர். ஒன்றிய அரசு உடனடியாக விழித்துக்கொண்டு, தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காக்க நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என தெரிவித்துள்ளார்.

GEM SPINNERS INDIA LIMITED

78 CATHEDRAL ROAD, CHENNAI 600 086

CIN : L17111TN1990PLC019791

accounts@gemspin.com

NOTICE

Notice is hereby given that Pursuant to Regulation 29 and 33 of the Securities and Exchange Board of India ((Listing obligations and Disclosure Requirements) Regulations 2015, a Meeting of the Board of Directors will be held on Friday, the 14th February 2025 at 11.30 a.m at our Corporate Office at No.78 Cathedral Road, Chennai 600 086 to consider among other things, the approval of Unaudited Financial Results for the quarter ended 31st December 2024.

Place : Chennai

Date : 07.02.2025

For GEM SPINNERS INDIA LTD

A.Vani

Company Secretary

பங்குச் சான்றிதழ்கள் காணாமல் போனது பற்றிய அறிவிப்பு

M/s. ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட் வழங்கிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள பங்குச் சான்றிதழ்(கள்) தொலைந்துவிட்டன/காணாமல் போய்விட்டன என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

போலியோ எண்	பங்குகள் எண்ணிக்கை	சான்றிதழ் எண்	குறியீட்டு எண்.
79509	450	608123	69513899-69514348

அதன் காரணமாக நிறுவனத்திற்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, நகல் பங்குச் சான்றிதழை வழங்குவதற்காக நிறுவனத்திடம் விண்ணப்பித்துள்ளோம்.

மேற்கூறிய பங்குச் சான்றிதழை எந்த வகையிலும் வாங்குதல் அல்லது கையாளுதல் ஆகியவற்றுக்கு எதிராக பொதுமக்கள் இதன்மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். கூறப்பட்ட பங்குச் சான்றிதழின் (கள்) சம்பந்தமாக ஏதேனும் உரிமைகோரலைக் கொண்ட எந்தவொரு நபரும், **ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட் ஸ்ரீ டவர்ஸ்,** 14A, **தெற்கு பேஸ், இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை** 600 032 **அல்லது அதன் பங்கு பரிமாற்ற முகவர், இன்டிரேடட் ரெஜிஸ்ட்ரி மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், 'கென்சஸ் டவர்ஸ்', 2வது தளம், எண்.1 ராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை** 600 017 அவர்களுக்கு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 நாட்களுக்குள் அத்தகைய உரிமைகோரலை தாக்கல் செய்ய வேண்டும், இல்லையெனில் நிறுவனம் மேலும் தெரிவிக்காமல் நகல் சான்றிதழ்(களை) வழங்கத் தொடங்கும்.

பங்குதாரர்கள் பெயர்

சரவணன் T

பங்குதாரர்கள் முகவரி : 2/297, நஞ்சைக்காளக்குறிச்சி, காளக்குறிச்சி நஞ்சை, நஞ்சைக்காளக்குறிச்சி அஞ்சல், கரூர் மாவட்டம், தமிழ்நாடு 639 002

தேதி: 08.02.2025

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

Kotak Mahindra Bank

பதிவு அலுவலகம்: 27வுKC, C 27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை 400 051

கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட், எண்: 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600006.

சுவாதீன அறிவிப்பு

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் (54 ஆம் 2002) கீழும் மற்றும் பிரிவு 13(12)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும், 2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிமுறைகளின் 9வது விதிமுறைக்கு ஏற்ப, கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களுக்கு அனுப்பிய டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை, திரும்ப செலுத்தும் நாள் வரையிலான வட்டி செலவினங்கள் மற்றும் இதர கட்டணங்களை மேற்சொன்ன நோட்டீஸ்கிடைத்த 60நாட்களுக்குள்திரும்பச் செலுத்துமாறு கேட்டுக்கொண்டிருந்தார். எனினும், மேற்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் /உடன்கடன்தாரர்கள் பாக்கித் தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்கள், உடன்கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தில் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதிகளுக்கு இணங்கவும், கீழ்க்கண்ட தேதியன்று சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரர்களுக்கு குறிப்பாக, பொதுமக்களுக்கு பொதுவாக எச்சரிக்கப்படுவது யாதெனில், அடையாளம் சுவாதீனம் எடுத்துக் கொண்ட அசையா சொத்து கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு குறிப்பிட்ட தொகை மற்றும் எதிர்கால வட்டி, செலவுகள் மற்றும் அந்தந்த தேதியிலிருந்து கட்டணங்கள் ஆகியவற்றுக்கு பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்களும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. பிரிவு 13(2)–ன் கீழ் டிமாண்ட் நோட்டீஸ் அனுப்பிய தேதி, நிலுவைத் தொகை, சொத்தின் விவரம், கடன்தாரர்கள் விவரம் மற்றும் செலுத்த வேண்டிய தொகை மற்றும் சுவாதீனம் எடுத்த தேதி ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கடன்தாரர், உடன்கடன்தாரர்/ உத்தரவாததாரர் பெயர் மற்றும் முகவரி கடன் கணக்கு எண். கடன் தொகை	அசையா சொத்தின் விவரம்	1. சுவாதீனத் தேதி 2. சுவாதீன வகை 3. டிமாண்ட் நோட்டீஸ் தேதி 4. நிலுவைத் தொகை ரூ.
திரு.மணிகண்டன் S, S/o **திரு. சௌந்தராபாண்டியன்** முகவரி: கலாச வாகனத் தொழிற்சாலை, C/o ஸல்க்ரீயின், ஆவடி, சென்னை 600054. **திருமதி ஸ்ரீங்கரி நாகராஜன்,** W/o, **திரு.மணிகண்டன்** S இருவரது முகவரி:314 ஏ, பூங்கா தெரு, ராமன் அபார்ட்மெண்ட்ஸ், பூம்பொழில் நகர், கோவிலம்பாக்கம், சென்னை, தமிழ்நாடு 600062. மேலும் பிளாட் எண். எப் 3, முதல் தளம், மனை எண்.35, ஸ்ரீ வைஷ்ணவி நகர், காரணைபுதுச்சேரி கிராமம், பெருமாட்டுநல்லூர், கூடுவாஞ்சேரி, சென்னை 603202. கடன் கணக்கு எண்: HOU/OMR/0716/301154 அனுமதிக்கப்பட்ட கடன் தொகை: ரூ.27,40,000/- (ரூபாய் இருபத்தேழு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும).	சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். பிளாட் எண்.எப்3 உடன் பிரிவுபடாத பங்கு நிலம் 420 சதுர அடியுடன், சூப்பர் பில்ட்-அரியா விஸ்தீரணம் 920 சதுர அடி முதல் தரம் மற்றும் ஒரு கவர்டு கார் பார்க்கிங் அமிட்டீஸ் எண்.1: காலி வீட்டு மனை, மனை எண்.35ஏ, விஸ்தீரணம் மொத்த நிலம் 3460 சதுர அடியில் 1500 சதுர அடி, லேஅவுட் பெயர் "ஸ்ரீ வைஷ்ணவி நகர்" (அங்கீகார எண்.) CSAR/DTCP.86-151/L.P.125) பசலாய சர்வே எண்.362/10, பட்டா எண். 1190, புதிய பட்டாப்படி சர்வே எண். 362/67, இந்த சொத்தானது பசலாய எண்.7, காரணைபுதுச்சேரி கிராமம், செங்கல்பட்டு தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது. எல்லைகள் : வடக்கு : மனை எண்.35B, தெற்கு : மனை எண்.34, கிழக்கு, 24 அடி சாலை, மேற்கு : மனை எண்.35B, விஸ்தீரணம் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 50 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில்: 50 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கத்தில்: 30 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கத்தில்: 30 அடி இந்த சொத்தானது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்டத்தில் உள்ளது. அயிட்டம் எண். II : காலி வீட்டு மனை, மனை எண்.35பி, விஸ்தீரணம் மொத்த நிலம் 3460 சதுர அடியில் 1960 சதுர அடி, லேஅவுட் பெயர் "ஸ்ரீ வைஷ்ணவி நகர்" (அங்கீகார எண். CSAR/DTCP.86- 151/L.P.125) பசலாய சர்வே எண்.362/10, பட்டா எண். 1190, புதிய பட்டாப்படி சர்வே எண். 362/67, இந்த சொத்தானது பசலாய எண்.7, காரணைபுதுச்சேரி கிராமம்,